| | | |
|---|---|---|
| | **இ.வே.ஆரா.கு - மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**<br>**நாக்பூர்** | |

27 வது வாரம் - வாராந்திர ஆலோசனைகள்- பருத்தி பயிர் சாகுபடி ( 21-27 **நவம்பர்** 2023 )

“இங்குதரப்பட்டுள்ள அறிவுரைகள்- அந்தந்த மாநில அரசு வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டவை”

| **தமிழ்நாடு** | | பெய்த மழையளவு -(மி.மீ) | | | | | கணிக்கப்பட்டுள்ள மழையளவு -(மி.மீ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **நவம்பர்** | | | | | **நவம்பர்** | | | | |
| | | **17** | **18** | **19** | **20** | **21** | **23** | **24** | **25** | **26** | **27** |
|  | பெரம்பலூர் | 3.4 | 0 | 0 | 0 | 0 | 40 | 35 | 40 | 20 | 25 |
| | சேலம் | 0 | 0 | 0 | 0 | 0 | 40 | 25 | 25 | 15 | 35 |
| | திருச்சி | | | | | | 40 | 35 | 40 | 20 | 25 |
| | விருதுநகர் | 0 | 0 | 0.5 | 0 | 0 | 70 | 50 | 45 | 40 | 35 |
| மழையின் அளவு மற்றும் வண்ணக் குறியீடு | | 0.1 to 2.4 மி.மீ | | 2.5 to 15.5 மி.மீ | | 15.6 to 64.4 மி.மீ | | 64.5 to 115.5 மி.மீ | | 115.6 to 204.4 மி.மீ | |
| மழைப்பொழிவு வகை | | மிக லேசான மழை | | லேசான மழை | | மிதமான மழை | | பலத்த மழை | | மிக அதிக மழைப்பொழிவு | |

**பயிர் நிலை:**

கோயம்புத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில், பருத்தி பயிரானது காய் முதிர்ச்சியடையும் பருவத்தில் உள்ளது. முன்னர் விதைக்கப்பட்ட வயல்களில், நன்கு முற்றிய பருத்தி அறுவடை செய்யப்பட்டுள்ளது. இளஞ்சிவப்பு காய்ப்புழு தாக்குதல் சில வயல்களில் காணப்படுகிறது. அல்ட்ர்னேரியா இலைக்கருகல் நோய், பாக்டீரியக் கருகல் நோய், வேர் அழுகல் நோய் மற்றும் புகையிலை கீற்று வைரஸ் நோய் தாக்குதல் காணப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகில் உள்ள பகுதிகளில், பயிரிடப்பட்ட பருத்தி பயிரானது காய் வளர்ச்சி பருவத்தில் உள்ளது. சில வயல்களில் தத்துப்பூச்சி தாக்குதல் காணப்படுகிறது. தண்டு கூன்வண்டு மற்றும் வேர் அழுகல் நோய் சில பகுதிகளில் காணப்படுகிறது.

**ஆலோசனைகள்:**

கோயம்புத்தூரில் அதிக மழையின் காரணமாக தேங்கியுள்ள நீரை, பாசன வடிகால்களை அமைத்து வெளியேற்றவும். வயல்களில் அறுவடை நடைபெறுவதால், வயல்களை சுத்தமாக வைத்துக் கொள்ளவும். சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் பொருளாதார சேதநிலையை தாண்டுமானால், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பூ்ளோனிகமிட் 50 டபிள்யு ஜி @80 கிராம்/ஏக்கர் (**அல்லது**) **டயாபென்தியுரான்** 50% **டபிள்யு பி**@250 **கிராம்/ஏக்கர்** (**அல்லது**) **இமிடாகுளோபிரிட்** 17.8 **எஸ் ல்** @60 **மி லிட்ட்ர்/ ஏக்கர்** (**அல்லது**) **தயாமீதாங்சம்** 25 **டபிள்யு ஜி**@40 **கிராம்/ஏக்கர் என தெளிக்கவும். வயல்களில் பார்த்தீனியம் களைகளை**

**நீக்கியும்**, **இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்தியும் புகையிலை கீற்று நோய் தாக்குதல் பரவுதலை கட்டுப்படுத்தலாம்**. **இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்த தயாமீதாங்சம்** 25 **டபிள்யூ ஜி**@40 **கிராம்**/ **ஏக்கர்** (**அல்லது**) **ஸபைனட்டோராம்** 11.7 **எஸ் சி** @170 **மி லிட்டர்**/**எக்கர் என தெளிக்கவும்**. **இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் தாக்குதல் பொருளாதார சேத நிலையை விட அதிகமாக இருப்பின்** (5-10 % **காய்த்தாக்குதல்** (**அல்லது**) 8 **பூச்சிகள் ஒரு இன கவர்ச்சி பொறியில் என மூன்று நாட்களுக்கு தொடர்ந்து இருந்தால்**) **ப்ரோபெணோஃபாஸ்** 50 **ஈசி**@600 **மி லிட்டர்**/**எக்கர்** (**அல்லது**) **குளோரிபைரிபாஸ்** 20 **ஈசி** @ 500 **மி லிட்டர்**/**எக்கர்** (**அல்லது**) **குயினால்ஃபாஸ்** 20 **எஇ**ஃ @ 400 **மி லிட்டர்**/**எக்கர்** (**அல்லது**) **இமாமைக்டின்பென்சோயேட்** 5 **எஸ் ஜி** @100 **கி** /**எக்கர்** @ (**அல்லது**) **இன்டோசாகார்ப்** 14.5@200 **மி லிட்டர்**/ **எக்கர் என தெளிக்கவும்**. அல்ட்ர்னெரியா இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த கார்பன்டர்சிம் 50 டபிள்யு பி @0.04% (அல்லது) கார்பன்டர்சிம் 12%+ மேங்கோசப் 63% டபிள்யூ பி@0.3% (அல்லது) கிரீசோசிம் மெத்தில் 44.3 எஸ் சி@0.1 (அல்லது) ப்ரோபிநெப் 70 டபிள்யு பி@0.25% (அல்லது) ப்ரோபிகோணசோல் 25 **ஈசி** @0.1% (அல்லது) மிட்டிராம் 55%+ பைராகுலோஸ்ட்ரோபின் 5% டபிள்யு ஜி@0.2% (அல்லது) அசோசாசிஸ்ரோபின் 18.2 டபிள்யு/டபிள்யு+டிபிணோகோணசோல் 11.4 % டபிள்யு/டபிள்யு எஸ் சி@0.1 % (அல்லது) பூஃலுஸாபைரோசாட் 167 கி/லிட்டர்+ பைராகுளோஸ்ட்சோபின் 333 கி/லிட்டர் @0.6 % என தெளிக்கவும். காப்பர்ஆக்ஸிகுளோரைடு 50 டபிள்யு பி/ டபிள்யு ஜி @30 கிராம்/10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து பாக்டீரியக் கருகல் நோயை கட்டுப்படுத்தலாம். வேர் அழுகல் நோய் காணப்படுகிற செடிகளிலும் மற்றும் அதனை சுற்றியுள்ள செடிகளின் வேர்ப்பகுதிகளில் கார்பெண்டசிம் 50 டபிள்யு பி @ 12 கிராம்/ 10 லிட்டர் தண்ணீரில் கலந்து ஊற்றவும். நன்கு முதிர்ச்சி அடைந்த பருத்தி காய்களை மழைக்கு முன்னர் அறுவடை செய்யவும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் பலத்த மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்ப்பாசனத்தை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் பொருளாதார சேதநிலையை தாண்டுமானால், பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பூஃளோனிகமிட் 50 டபிள்யூ ஜி @80 கிராம்/ஏக்கர் (**அல்லது**) **டயாபென்தீயுரான்** 50% **டபிள்யு பி**@250 **கிராம்**/**ஏக்கர்** (**அல்லது**) **இமிடாகுளோபிரிட்** 17.8 **எஸ் ல்** @60 **மி லிட்ட்ர்**/ **ஏக்கர்** (**அல்லது**) **தயாமீதாங்சம்** 25 **டபிள்யூ ஜி**@40 **கிராம்**/**ஏக்கர் என தெளிக்கவும்**. **இளஞ்சிவப்பு காய்ப்புழுக்களின் தாக்குதல் பொருளாதார சேத நிலையை விட அதிகமாக இருப்பின் ப்ரோபெணோஃபாஸ்** 50 **ஈசி**@600 **மி லிட்டர்**/**எக்கர்** (**அல்லது**) **குளோரிபைரிபாஸ்** 20 **ஈசி** @ 500 **மி லிட்டர்**/**எக்கர்** (**அல்லது**) **குயினால்ஃபாஸ்** 20 **எஇ**ஃ @ 400 **மி லிட்டர்**/**எக்கர்** (**அல்லது**) **இமாமைக்டின்பென்சோயேட்** 5 **எஸ் ஜி** @100 **கி** /**எக்கர்** @ (**அல்லது**) **இன்டோசாகார்ப்** 14.5@200 **மி லிட்டர்**/ **எக்கர் என தெளிக்கவும்**

**தமிழ் மொழிபெயர்ப்பு: முனைவர். அ. மணிகண்டன், முனைவர். ம. சரவணன்**